**கவனிக்க .-** *2015.05.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1918 - 2015 ජූනි මස 05 වැනි සිකුරාදා - 2015.06.05

*1918 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## *பகுதி IV(அ) - மாகாண சபைகள்*

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 874 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூன் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

கொழும்பு 8,

*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண தேசிய வைத்திய, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் விளையாட்டு அலுவலர் பதவிக்கு ஆட்சேர்த்தல்- 2015

வடமேல் மாகாண தேசிய வைத்திய, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் விளையாட்டு அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளபடி தகைமை பெற்றுள்ள வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவுள்ள இலங்கைப் பிரசைகளான ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. சம்பளத்திட்டம்.-** (அ) விளையாட்டு அலுவலர் தரம் III
ரூபா 14,425-10×145-11×170-6 × 240 - 14 × 320 - ரூபா 23,665 ஆகும்.
அ. நி. சு. 6/2006 (iv) - MT 1/2006 A இன்படி,
(ஆ) பயிலுனர் பதவி
மாதாந்தம் ரூபா 12,000

(அ) **விளையாட்டு அலுவலர் தரம்** III

**குறிப்பு** I

இந்த சம்பளத்திட்டம், பொது நிருவாக சுற்றுநிரூபம் 6/2006 (iv) இன் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சம்பளத் திட்டம் அரசின் மூலம் அடிக்கடி செய்யப்படுகின்ற மாற்றங்களுக்கு உட்பட்டதாகும். இந்தப் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் அலுவலர்கள் முதல் நியமனத்தில் இருந்து 3 வருடங்களுக்குள் முதலாவது தடைதாண்டற் பரீட்சையில் சித்திபெற வேண்டும்.

**குறிப்பு** II

பொது நிருவாக சுற்றுநிரூபம் 1/2014 இன்படியும் அதற்கு அமைவான சுற்றுநிரூபத்தின் படியும் சேவையில் சேர்ந்து 5 வருடங்களுக்குள், சேர்ந்த மொழி மூலத்திற்கு பிரத்தியேகமாக ஏனைய அரச மொழி/மொழிகள் பற்றிய நிபுணத்துவம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**3. கல்வி, தொழில் மற்றும் ஏனைய தகைமைகள்.-**

3.1 (அ) **கல்வித் தகைமைகள் :**

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மற்றும் கணித பாடத்தில் மற்றும் 2 பாடங்களில் விஷேட சித்தியுடன் ஆங்கில மொழியும் உட்பட 6 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல்.

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் குறைந்தபட்சம் 3 பாடங்களில் (பொது அறிவு பரீட்சை தவிர) சித்தி பெற்றிருத்தல்.

(iii) தேசிய விளையாட்டு விஞ்ஞானபீடம் மூலம் நடாத்தப்படுகின்ற வருடமொன்றுக்கு குறையாத பாடநெறியை பயின்று சித்திபெற்றிருத்தல்.

(ஆ) **தொழிற் தகைமைகள் :**

(i) ஏதேனுமோர் விளையாட்டில் தேசிய அணியில் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச போட்டியொன்றில் பங்குபெற்று இருத்தல்.

அல்லது

(ii) விளையாட்டு அமைச்சின் மூலம் நடாத்தப்படுகின்ற தேசிய மாபெரும் விளையாட்டு வைபவத்தில் ஏதாவதோர், போட்டியில் தேசிய மட்டத்தில் 1ஆம், 2 ஆம் அல்லது 3 ஆம் இடம் பெற்றிருத்தல் அல்லது தேசிய விளையாட்டுச் சங்கம் மூலம் நடாத்தப்படுகின்ற பிரதான தேசிய திறந்த போட்டியொன்றில் 1 ஆம் அல்லது 2 ஆம், 3 ஆம் இடம் பெற்றிருத்தல்.

(இ) **பௌதிக தகைமைகள் :**

சகல விண்ணப்பதாரிகளும், வடமேல் மாகாணத்தில் ஏதாவதோர் பிரதேசத்தில் சேவை புரியவதற்கும், பதவியில் கடமை புரிவதற்கும், போதியளவு உடல், உள நலமுடையவராகவும் இருப்பதோடு, உடல் நலன் பரீட்சிப்பதற்காக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் மற்றும் விளையாட்டு வைத்திய பிரிவின் மூலம் நடாத்தப்படுகின்ற செய்முறை பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும். இந்தப் பரீட்சை மறுதாக்க வேகம், நெகிழும் தன்மை, வயிற்றின் வலிமை, கைகளின் வலிமை, உடலை அசைத்தல், நின்ற நிலையில் பாய்தலும் வேகமும் மற்றும் சகிப்புத் தன்மை போன்ற விடயங்களை உள்ளடக்கியதாகும்.

(ஈ) **வேறு தகைமைகள்.-**

(i) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் அதி சிறந்த ஒழுக்க சீலர்களாக இருக்க வேண்டும்.

(iii) சமய அல்லது சமய பிரிவொன்றில் மத குருவாக இருக்கக்கூடாது.

(iv) விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு அண்மித்த கால எல்லைக்குள் 3 வருடங்கள் வடமேல் மாகாணத்துள் நிரந்தர வதிவிடம் உள்ளவராக இருக்க வேண்டும். (வாக்காளர்ப் பட்டியலில் பெயர் இருக்க வேண்டும்.)

(v) தற்போது அரச/மாகாண அரச சேவையில் உள்ள ஒருவராயின் அவர் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு 5 வருடங்களுக்குள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளமை தவிர தண்டனை பெற்றிருக்க கூடாது. அத்துடன் அவ்வாறு 5 வருடங்களுக்குள் சகல சம்பள உயர்வையும் பெற்றிருக்க வேண்டும்.

(vi) விண்ணப்பம் கோரும் தினத்துக்கு முன்னர், சகல தகைமைகளும் பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

3.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் மற்றும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். தற்போது அரச சேவையில் அல்லது மாகாண சேவையில் உள்ளவர்களுக்கு உயர்ந்த வயது எல்லை 40 வருடங்கள் ஆகும்.

(ஆ) **பயிலுநர் பதவி**

விளையாட்டு அலுவலர் III பதவிக்கு ஆட்சேர்க்கும்போது, போதியளவு விண்ணப்பதாரிகள் இல்லாத பட்சத்தில், தொழிற் தகைமைகள் (i) இல் குறிப்பிட்டுள்ளபடி சர்வதேச போட்டிகளில் பங்குபற்றிய மேற்கூறப்பட்டுள்ள கல்வித் தகைமைகளின் கீழ், (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 1 பாடத்தில் மட்டும் சித்தியடைந்து இருத்தல் மற்றும், 3.1 (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் சேவைகள் உட்பட்டு 3 வருடங்கள் பூரணமாகின்ற முறையில் இந்தப் பதவிக்காக விண்ணப்பிக்கலாம். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் பயிலுநர் பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவதோடு 3 வருட காலத்துள் உரிய தகைமையை பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். இந்த தகைமையை பூர்த்தி செய்த நாள் தொடக்கம் விளையாட்டு அலுவலர் III ஆம் வகுப்புக்கு நியமிக்கப்படுவார்.

உரிய காலத்தில் உரிய தகைமைகளை பூர்த்தி செய்ய முடியாது போனால், அந்த நபருடைய சேவையை இரத்துச் செய்யும் அதிகாரம் நியமனப் பொறுப்பதிகாரிக்கு உரியது. அதே போன்று சாதாரண காரணங்களைக் கருத்தில் கொண்டு, திணைக்கள தலைவரின் சிபாரிசின் படி தேவையான தகைமைகள் பூரணப்படுத்துவதற்காக ஒரு வருடத்துக்கு குறையாத கால எல்லையை நீடிக்கும் அதிகாரம் நியமனப் பொறுப்பதிகாரிக்கு உரியது.

4. **சேவை நிபந்தனைகள்.-**

4.1 இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும். விதவை/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு வழங்க வேண்டும்.

4.2 இப்பதவிக்கு நியமனம் பெறுபவர்கள் உரிய முறைப்படி தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

4.3 தாபனக் கோவையில் I ஆவது பிரிவின் II ஆவது பந்தியின் 10 முதல் 12 வரையுள்ள பந்திகள் விதிமுறைகள், பதவிக்கு உரியபடி அமைந்திருக்கும்.

4.4 சகல அலுவலர்களும், இலங்கை சனநாயக .............. 4 ஆவது விதிமுறைகளை மற்றும் அரசின் மொழி பற்றிய குறிக்கோள்கள் நடைமுறைப்படுத்தப்படும் விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

4.5 இந்தப் பதவிக்காக சேர்த்துக்கொள்ளும் போது, பதவியுயர்வு செய்யும் முறையின் நிபந்தனைகளுக்குப் புறம்பாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் நிபந்தனைகளுக்கும், நிதி சார்பான நிபந்தனைகளுக்கும் மாகாண ஒழுக்க கோவை, மாகாண நிதி நீதிக் கோவை, மற்றும் திணைக்கள கட்டளைகளுக்கும் அரசு மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் வழங்கப்பட்டுள்ள மற்றும் அடிக்கடி வழங்கப்படுகின்ற வேறு கட்டளைகளுக்கும் அமைவாக கடமை புரிய சகல அலுவலர்களும் கட்டுப்பட்டவராதல் வேண்டும்.

4.6 சேர்த்துக் கொள்ளப்படும், அலுவலர்கள் இடமாற்றங்களுக்கு கட்டுப்பட வேண்டும். வடமேல் மாகாண சபை கட்டுப்பாட்டு பிரதேசத்துக்குள் நியமிக்கப்படுகின்ற ஏதாவது பிரதேசத்தில் சேவை புரிய கடமைப்பட்டுள்ளார்.

5. **சேர்த்துக்கொள்ளப்படும் விதம்.-** வெற்றிட எண்ணிக்கையை விட கூடுதலாக எண்ணிக்கை விண்ணப்பதாரிகள் உள்ளபோது, வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் திறந்த போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன், அந்தப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி 40% இற்கும் அதிகமான அளவில் புள்ளிகள் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளின் புள்ளிப் பட்டியலின் முன்னுரிமையின் படி வெற்றிட எண்ணிக்கை போன்று மூன்று மடங்கு, வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் நடாத்தப்படுகின்ற நேர்முகப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை பெறுவர்.

அதன்படி, முறையான நேர்முகப்பரீட்சைக்கு தோற்றிய பின்பு பெற்றுக்கொண்ட ஒன்று திரட்டிய புள்ளிகளின் எண்ணிக்கையின்படி தயாரிக்கப்படுகின்ற திறமைப் பட்டியலில் சேர்க்கப்படுபவர்களின் விளையாட்டு விஞ்ஞானபீடத்தில் உடல் நல பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் பின் இந்த பதவியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

வெற்றிட எண்ணிக்கைக்கு சமமான/குறைந்த எண்ணிக்கையுள்ள விண்ணப்பதாரிகள் தோற்றியவிடத்து அவர்கள் விளையாட்டு விஞ்ஞான பீடத்தில் உடல் நலம் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய பின்பு பதவியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

6. **எழுத்துப் பரீட்சை.-**

| பாடங்கள் | முழுப்புள்ளிகள் | பெற்றுக்கொள்ள வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|
| 1. நுண்ணறிவு | 100 | 40% |
| 2. மொழித்திறன் | 100 | 40% |

**எழுத்துப் பரீட்சையின் பாடத்திட்டம்.-**

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. நுண்ணறிவு | விண்ணப்பதாரி பொது அறிவு, தர்க்க ரீதியான திறமை, கருத்து வெளிப்பாடு, புள்ளி விபரங்கள் தொடர்பான திறமை மற்றும் கிரகித்தல் திறமை போன்றவற்றை பரீட்சிக்கும் வினாப்பத்திரம். |
| 2. மொழித்திறன் | எழுத்து, இலக்கணம், பிழையற்ற தெளிவான கருத்து வெளிப்பாடு, மொழிப்பிரயோகம் பற்றிய கிரகித்தல், சுருக்கம் மற்றும் கட்டுரை எழுதும் திறமை போன்றவற்றை பரீட்சிக்கும் திறமை அடங்கிய வினாப்பத்திரம். |

(பயிலுனர் பதவிக்கும் இந்தப் பரீட்சை பொருத்தமாகும்.)

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**

| புள்ளி வழங்கப்படும் தலைப்புகள் | புள்ளிகள் வழங்கப்படும் முறை | | உயர்ந்த புள்ளித் தொகை |
|---|---|---|---|
| 1. கல்வித் தகைமைகள் | விளையாட்டு டிப்ளோமா (1 வருடம் அல்லது அதை விட) | 05 | 10 |
| | சாதாரண பட்டதாரி | 07 | |
| | விளையாட்டு பட்டதாரி | 10 | |
| 2. விளையாட்டுத் திறமைகள் | சேர்த்துக்கொள்ளும் முறையில் 7.2.2.2 பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள விளையாட்டுப் போட்டிகளின் வெற்றிகளுக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். | | 70* |
| 3. விளையாட்டுப் போட்டிகளுக்காக பயிற்றுவித்தல், ஏற்பாடு செய்தல் | சேர்த்துக்கொள்ளும் முறையில், 7.2.2.2 பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள மாவட்ட, மாகாண, தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளுக்காக பயிற்றுவித்தல்/ நடுவராக இருத்தல் அல்லது ஏற்பாடு செய்தல் போன்றவைகளுக்கு மட்டுமே புள்ளி வழங்கப்படும். (தேசிய அல்லது சர்வதேச விளையாட்டுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்கள்/ அனுமதிப்பத்திரங்கள் முன்வைக்க வேண்டும். | | 10 |
| | மாவட்ட/மாகாண போட்டிகள் | 05 | |
| | தேசிய போட்டி | 07 | |
| | சர்வதேச போட்டி | 10 | |
| சர்வதேச மொழித் திறமை | சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும் | | 05 |
| ஆளுமை | | | 05 |
| தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் மீண்டும் பரீட்சிக்கப்படுதல் மற்றும் சரியானவை என உறுதிப்படுத்திக் கொள்ளுதல் நேர்முகப் பரீட்சையில் நடைமுறைப்படுத்தப்படும். | | | |

* விளையாட்டுத் திறமைகளை பரீட்சிப்பதற்கான புள்ளிகள் வழங்கும் முறை விபரமாக பின்வருமாறு :-

| விளையாட்டுப் போட்டி மட்டம் | புள்ளிகள் | | |
|---|---|---|---|
| | 1 | 2 | 3 |
| மாகாணப் போட்டி | 20 | 15 | |
| தேசியப் போட்டி | 45 | 42.5 | 40 |
| தெற்காசியப் போட்டி | 55 | 52.5 | 50 |
| ஆசிய போட்டிகள், பொதுநலவாய நாடுகளின் போட்டி சான்றிதழ் 1-2 அல்லது 3 ஆவது இடம் | | 65 | |
| ஆசிய பொதுநலவாய நாடுகளின் உலக கிண்ண ஒலிம்பிக் போட்டிகளில் 1,2 அல்லது 3 ஆவது இடம் | | 70 | |

6. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் இலக்கம் 2003-02-13 கணக்கு வரவு வைக்கும் படி தமது நிரந்தர வதிவிடத்தை கோட்டத்தில் அல்லது சேவை நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தில், பிரதேச செயலாளர் அலுவலகத்துக்கு வழங்கி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை வ. மா. ச. மு. 2 மாதிரியொன்றை பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் கழராமல் ஒட்டவேண்டும், அவ்வாறு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுத் தவிர வேறு நிறுவனங்களுக்கு வழங்கி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுக்களோ காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், எக்காரணம் கொண்டும் வழங்கிய பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

7. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.-

7.1 இந்த அறிவித்தலில் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை போன்று ஏ4 அளவிலான (21cm. × 29 cm.) தாளில் இரண்டு பக்கங்களையும் பாவித்து விண்ணப்பத்தினை தயாரித்துக் கொள்ள வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை "செயலாளர், வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகம், குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும். விண்ணப்பம் இட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விளையாட்டு அலுவலர் பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2015" எனக் குறிப்பிட வேண்டும்.

7.2 தற்போது அரச/மாகாண அரச நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை திணைக்கள/நிறுவன தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.

7.3 பொருத்தமான மாதிரி விண்ணப்பத்துக்கு உட்படாத, உரிய தினத்துக்கு முன்பு பரீட்சை கட்டணம் வழங்காத, உரிய முறையில் தகவல்கள் வழங்கப்படாத, பூரணமற்ற மற்றும் தாமதமாகி கிடைக்கின்ற விண்ணப்பங்கள் எவ்விதமான முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு அனுகூலமானதா என தேடிப்பார்த்தல், விண்ணப்பதாரியின் கடமையாகும். பொருத்தமான முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பம் மூலம் ஏற்படும் நட்டம் விண்ணப்பதாரி ஏற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பத்திலே நிழற்படப்பிரதியொன்றை தன்வசம் வைத்துக் கொள்ளல் பிரயோசனமாகும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

8. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2015.07.06 ஆகும்.

9. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் இல்லாதவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகைமைகள் பரீட்சிப்பதற்காக உரிய ஆவணங்களின் மூலப் பிரதி நேர்முகப் பரீட்சையில் முன்வைக்கப்பட வேண்டும். எல்லா விண்ணப்பதாரிகளும் பதவிக்கான சகல தகைமைகளையும், விண்ணப்பம் பெறும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன் பூரணப்படுத்தியிருக்க வேண்டியது கட்டாயமாகும்.

10. யாராவதோர் விண்ணப்பதாரியின் என்று பதவி பெற முன்னர் ஏதாவதோர் தருணத்தில் தெரிய வந்தால், விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தத் தன்மை இரத்து செய்யப்படும். பதவி பெற்றதன் பின்பு தெரிந்து பொய்யான தகவல்களை வழங்கியுள்ளதாக அல்லது உண்மையான தகவல்களை வேண்டுமென்றே மறைத்து இருத்தமை தெரிய வந்தால் சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

11. இந்தப் பரீட்சையை நடாத்தல் அல்லது நடத்தாது விடல் அல்லது நடத்திய பின்பு தெரிவு செய்தல்/செய்யாது போதல் அல்லது வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப இறுதி முடிவெடுத்தல் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உரியதாகும். அதே போன்று

இந்த அறிவித்தலில் விதிமுறைகள் பின்பற்றப்படாத பட்சத்தில் அது தொடர்பான இறுதி முடிவு வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக் குழுவுக்கு உரியதாகும்.

வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

காந்தி வேஹெல்ல,
செயலாளர்.
வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.

வடமேல் மாகாண அரசாங்க சேவை
ஆணைக்குழு அலுவலகம்,
மாகாண சபை அலுவலகம்,
பல்கூட்டுத்தொகுதி,
குருநாகல்,
2015, மே 20.

(இந்த அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு பலவிதமான நிறுவனங்களின் மூலம் தவறான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள அறிவித்தல்கள் உள்ளபடி விபரங்கள் மற்றும் விண்ணப்பங்கள் சார்பாக எவ்விதமான வகைகூறலும் நடைபெறாது.)

மாதிரி விண்ணப்பப் படிவம்

**வடமேல் மாகாண தேசிய வைத்திய, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் விளையாட்டு அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2015**

விண்ணப்பிக்கும் பதவி ☐

விளையாட்டு அலுவலர் தரம் III - 1
பயிலுநர் பதவி - 2

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் ☐
(சிங்களம் -2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4)

பரீட்சை எண் : ☐
(அலுவலக உபயோகத்திற்கு)

1. 1.1 முதலெழுத்துக்களை பின்னால் இட்டு, முதலெழுத்துக்களுடனான பெயர் :------.
(ஆங்கில பெரிய எழுத்தில்)
உதாரணம் :- SILVA, A. B.
1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
1.4 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(பிரவேசப் பத்திரம் இம்முகவரிக்கு அனுப்பப்படும்)
1.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
1.6 தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர் எனின்,
பதவிப் பெயர் :----. ☐
நியமனத் திகதி :----.

2. 2.1 ஆண்/பெண் தன்மை (பெண் -1, ஆண் - 0) ☐
(சரியான இலக்கத்தை கூட்டில் இடுக.)
2.2 திருமணமானவர்/ஆகாதவர்
(திருமணமாகாதவர் - 1, திருமணமானவர் - 2)
2.3 தேசிய அடையாள அட்டை இல. :- ☐☐☐☐☐☐☐☐☐☐

3. பிறந்த திகதி : வருடம் : ☐ மாதம் ☐ திகதி ☐
3.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதியான 2015.07.06 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் :----- மாதங்கள் :------ நாட்கள் :------

4. கல்வி மற்றும் வேறு தகைமைகள் :----.

4.1 க. பொ. த. (சா. த. ) பரீட்சை
வருடம் :----. பரீட்சை சுட்டெண் :----.

| பாடங்கள் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உ. த. ) பரீட்சை
வருடம் :----. பரீட்சை சுட்டெண் :----.

| பாடங்கள் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |

4.2 தொழிற் தகைமை :----.
(விண்ணப்பத்துடன் வேறு எந்த சான்றிதழும் இணைக்கப்படக் கூடாது.)

5. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் :----.
திகதி :----.
பற்றுச்சீட்டு பெற்றுக்கொண்ட பிரதேச செயலாளர் அலுவலகம் :----.

| பற்றுச்சீட்டை இக்கூட்டினுள் கழறாதவாறு ஒட்டவும். |
|---|

**6. விண்ணப்பதாரியின் உறுதியுரை.-**

................................. ஆகிய நான், இந்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள சகல விபரங்களும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில் உண்மையானவையும் சரியானவையும் ஆகும் எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் ................ எனவும் ............. ஆம் திகதியன்று பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு எனவும், அதனை இங்கு ஒட்டியுள்ளேன் எனவும், உறுதி கூறுகிறேன். மேலும் பரீட்சை விதிகளுக்கு அமைய இயங்குவதற்கும், அந்தப் பரீட்சையின் நிபந்தனைகளுக்கு அமைய நான் பொருத்தமற்றவர் என தென்பட்டால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது அதன் பின்பு என்னுடைய பரீட்சை விண்ணப்பத்தை நிராகரிப்பதற்காக எடுக்கப்படும் தீர்மானத்துக்கு உடன்படுவேன். மேலும் பரீட்சையை நடாத்தல் சம்பந்தமாக வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் முன்வைக்கப்படுகின்ற சட்டங்களுக்கு கட்டுப்படுகிறேன் எனவும் உறுதிமொழிகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் செல்வன்/செல்வி/திரு./திருமதி ...................................... ஐ நான் நன்றாக அறிவேன் எனவும், அவர் ......................... திகதியன்று தனது கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
கையொப்பம் :----.
பதவியும் முத்திரையும் :----.

(இந்த உறுதியுரை அரச பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமான பணிப்பாளர் ஒருவர்/சட்டத்தரணி/முப்படை அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தலின்படி பதவியொன்றை வகிக்கும் அலுவலர் ஒருவர் அல்லது ரூபா 240,360 விடக்கூடிய வருடாந்த சம்பளம் பெறும், நிரந்தர பதவியுள்ள அரச/மாகாண சபை சேவை அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

அரச மற்றும் மாகாண அரச சேவையில் தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்கள முதல்வரின் சிபாரிசு (தேவையற்றவற்றை வெட்டிவிடுக.)

செல்வன்/செல்வி/திரு./திருமதி .......................... தற்போது ....................... அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் .............. ஆக நிரந்தர சேவையில் உள்ளார் எனவும், அவரின் சேவை மகிழ்ச்சிக்குரியது எனவும் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்/படவில்லை அல்லது மனிதாபிமான முறையில் தீர்வொன்றாக திறமையற்றவர் என ஓய்வு பெற்றுள்ளார்/பெறவில்லை எனின் அவரது பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(முத்திரை பதிக்கவும்)

திகதி :----.

6-193

## வடமேல் மாகாண பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரிய சேவையின் 3 ஆம் வகுப்பின் I (அ) தர வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை இணைத்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015 (சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி மூலம்)

வடமேல் மாகாண பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரிய சேவையின் வெற்றிடங்களுக்காக ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இலங்கை ஆசிரிய சேவையின் 3 ஆம் வகுப்பின் I (அ) தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தகைமை பெற்ற வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தை கொண்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பிரதேச செயலாளர் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு சேர்த்துக்கொள்ளப்படுவர் என்பதுடன், வெற்றிடம் நிலவும் பிரதேச செயலாளர் பிரிவுகள், பாடங்கள் மற்றும் ஆசிரியப் பதவிக்காக பாட அடிப்படையில் பட்டத் தகைமைப் பட்டியல் என்பனவற்றை www.psc.nw.gov.lk எனும் இணையத்தள முகவரியில் பார்வையிடலாம். தாம் விண்ணப்பிக்கும் பிரதேச செயலாளர் பிரிவின் தொடரிலக்கம், பாடம் மற்றும் மொழி மூலத்தின் குறியீட்டு இலக்கத்தை விருப்பு ஒழுங்கிற்கு ஏற்ப விண்ணப்பப் படிவத்தில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

2. வெற்றிடங்களின் எண்ணிக்கை 424

3. **சம்பளத்திட்டம்.**- அ. நி. சு. 6/2006 (xii) இன் II ஆவது உப பட்டியலின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப இலங்கை ஆசிரிய சேவைக்குரிய ஜீ. ஈ. - 1-2006 சம்பளப் பிரிவின் ரூபா 13,410-145×6-180×7-215×2 - ரூபா 15,970 மாதாந்த ஒன்றிணைந்த சம்பளத் திட்டத்தின் கீழ் சம்பளம் வழங்கப்படுவதுடன், வேலையைப் பொறுப்பேற்ற தினத்திற்கு ரூபா 15,755 மாதாந்த சம்பள அளவுத்திட்டத்தில் வைத்து சம்பளம் வழங்கப்படும். இச்சம்பளத்திட்டம் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டது.

**4. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.-**

**4.1 கல்வித் தகைமைகள் :**

(i) ஆசிரிய நியமனத்திற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட, சிறப்பிக்கப்பட்ட விடயப் பரப்புகளுக்குரிய, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனமொன்றில் பட்டம் பெற்ற ஒருவராகவிருத்தல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களுக்குரிய பட்டப் படிப்பை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். பட்டப் படிப்பிற்காக தெரிவு செய்த பாடம்/பாடங்களுக்குரிய வெற்றிடங்களுக்காக மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும். 2015.07.06 ஆந் திகதிக்கு முன்னர் பட்டப் படிப்பு பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

மற்றும்

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

**4.2 உடல், உள தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஆசிரியராகக் கடமையாற்றுவதற்கான உடல், உளத் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**4.3 வயது :**

விண்ணப்ப முடிவுத் திகதிக்கு ஆகக் குறைந்த வயது 18 ஆக இருக்க வேண்டும். உச்ச வயதெல்லை 40 ஆகும்.

**4.4 ஏனைய தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரி பிறப்பினால் அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும்.

(ii) போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு கிட்டிய 3 வருடங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கு வடமேல் மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவாளராக இருக்க வேண்டும். (நேர்முகத் தேர்வின் போது வாக்காளர் பெயர் பட்டியல் அல்லது கிராம அலுவலரினால் வழங்கப்படும் பிரதேச செயலாளரின் கையொப்பத்துடன் கூடிய சான்றிதழின் மூலம் வதிவிடத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.)

(iii) சிறந்த நடத்தையையும், உடல் நலத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

**5. சேவை நிபந்தனைகள்.-**

(i) ஆரம்ப நியமனம் பெறும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பாடசாலைகளில் குறைந்தது 10 வருடங்களேனும் சேவையாற்ற வேண்டும்.

(ii) அரச/மாகாண அரச சேவை நியமனங்களை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அந்த யாப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் உட்பட்டு தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கை ஆசிரிய சேவையின் 3 ஆம் வகுப்பின் I (அ) ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

(iii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமாகும். விதவை/தபுதாரன், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும்.

(iv) இப் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் 3 வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

(v) பதவி உயர்வுகள் இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்புக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும்.

06.

6.1 **சேர்த்துக்கொள்ளும் முறை.**- சேர்த்துக்கொள்வது எழுத்து மூல போட்டிப் பரீட்சை, பொதுவான நேர்முகப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரட்சை என்பவற்றின் அடிப்படையில் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்படும்.

6.2 எழுத்துமூல போட்டிப் பரீட்சை.- இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களை உள்ளடக்கியது.

| விடயம் | உச்ச புள்ளிகள் | சியத்தியடைவதற்கு தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| உளச்சார்புப் பரீட்சை (காலம் 01 மணித்தியாலம்) | 100 | 40 |
| பொது அறிவு (காலம் 01 மணித்தியாலம்) | 100 | 40 |

**பரீட்சை ஒழுங்குவிதிகள்.**-

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடைபெறும்.
(ii) அனைத்து விண்ணப்பதாரிகளும் பரீட்சையின் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலமே தோற்ற முடியும். அது தாம் நியமனம் பெற உத்தேசிக்கும் மொழி மூலமாக இருக்க வேண்டும்.
(iii) விண்ணப்பதாரி ஒருவர் தமது விண்ணப்பப்படிவத்தில் உள்ள மொழி மூலத்தை மாற்ற அனுமதிக்கப்படமாட்டார்.
(iv) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இரண்டு (2) வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும்.
(v) ஒரே அமர்வில் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை நியமிக்கும் அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

**விடயப் பரப்பு.**-

**விடய இலக்கம் 1** - உளச்சார்புப் பரீட்சை

விண்ணப்பதாரி கொண்டுள்ள ஆசிரியர் தொழிலுக்கான திறமை, தர்க்கவியல் அறிவு தொடர்பில் அளவிடுவதை நோக்காகக் கொண்டு இவ்வினாப் பத்திரம் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு மற்றும் குறு விடை வகைக்குரிய 50 வினாக்களை உள்ளடக்கியது. அவ்வனைத்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளிக்க வேண்டும்.

**விடய இலக்கம் 2**- பொது அறிவு

ஆசிரியத் துறை தொடர்பான பொது அறிவு மற்றும் அல்லது தேசிய ரீதியில் ஏற்பட்டுள்ள கல்வி முன்னேற்றங்கள் தொடர்பான பொது அறிவு மற்றும், கல்வி நவீனமயப்படுத்தல் தொடர்பான அறிவைப் பரீட்சிக்கும் பல்தேர்வு மற்றும் குறுவிடை வகைக்குரிய வினாக்களை உள்ளடக்கியது. அவ்வனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்பட வேண்டும்.

6.3 **பொது நேர்முகத் தேர்வு :**
ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்வதற்கான இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளமையை பரிசீலிப்பதற்காகவும், உடல், உள தகைமையை பரிசீலிப்பதற்காகவும் நடாத்தப்படும்.

6.4 **செய்முறைப் பரீட்சை:**
ஆசிரியராக கடமையாற்றுவதற்குத் தேவையான கற்றல், கற்பித்தல் செயல்முறை தொடர்பில் விண்ணப்பதாரி கொண்டுள்ள திறமையைப் பரீட்சிப்பதற்காக நடாத்தப்படும். விண்ணப்பதாரியினால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தலைப்பின் கீழ் ஐந்து (5) நிமிடங்களுக்குக் குறையாத முன்வைப்பொன்று செய்முறைப் பரீட்சையாக மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக 25 புள்ளிகள் வழங்கப்படும். கணினியைப் பயன்படுத்தி (power point presentation) மேற்கொள்ளப்படும் முன்வைப்புகளுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.)

| தொடர் இலக்கம் | செய்முறைப் பரீட்சையில் புள்ளிகளை வழங்குவதற்கான நியதிகள் | உச்ச புள்ளிகள் | சியத்தியடைவதற்கு தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | நோக்கமும் பிரவேசமும் | 05 | 02 |
| 2 | ஆளுமை மற்றும் குரல் முகாமை | 05 | 02 |
| 3 | தெளிவான தொடர்பாடல் | 05 | 02 |
| 4 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 5 | முன்வைப்பிற்கான நுட்ப முறைகளைப் பயன்படுத்தல் | 05 | 02 |
| | மொத்த புள்ளிகள் | 25 | 10 |

***நியதிகளின் நோக்கம்.-***

(i) நோக்கமும் பிரவேசமும்:
பாடத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்தல், பாடப்பிரவேசம் செய்யும் திறன் என்பவற்றை மதிப்பிடல்.

(ii) ஆளுமை மற்றும் குரல் முகாமை:
ஆசிரியர் என்ற வகையில் சிறந்த ஆளுமையுடன் திகழ்தல் மற்றும் கற்பித்தலின் போது குரலை முகாமை செய்வதற்கான இயலுமையை மதிப்பிடல்.

(iii) தெளிவான தொடர்பாடல்:
கற்றல், கற்பித்தல் செயன்முறையின் போது உரிய விடயங்களை முறையாக தொடர்பாடும் திறனை மதிப்பிடல்.

(iv) நேரமுகாமைத்துவம் :
வழங்கப்படும் கால எல்லையினுள் நோக்கத்தை அடையும் திறமையை மதிப்பிடல்.

(v) முன்வைப்பிற்கான நுட்ப முறைகளைப் பயன்படுத்தல் :
நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக முன்வைப்பின் போது நுட்பமுறைகளை முறையாக பயன்படுத்தும் ஆற்றலை மதிப்பிடல்.

***தெரிவு செய்யும் முறை.-***

(i) எழுத்துமூலப் பரீட்சைகள் இரண்டிலும் சித்தியடையும் விண்ணப்பதாரிகளுள், புள்ளிகளின் மொத்தத்தின் அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள், அந்தந்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ள தொகையிலும் ஐந்து (5) மடங்கானவர்கள் நேர்முக தேர்விற்காக அழைக்கப்படுவதுடன், அவர்களுள் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் வெற்றிடங்களில் எண்ணிக்கையை விடவும் மூன்று மடங்கானவர்கள் செய்முறைப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

(ii) எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் அவர்கள் பெற்ற புள்ளிகளின் மொத்தத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவர். அதன் அடிப்படையில் பிரதேச செயலாளர் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு நியமிக்கப்படுவர்.

(iii) செய்முறைப் பரீட்சைக்காக அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுள் யாதாயினுமொரு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்டவர்கள் எவரும் தகுதி பெறாதவிடத்து, செய்முறைப் பரீட்சைக்காக அழைக்கப்படாத, அப்பிரதேச செயலாளர் பிரிவிற்காக விண்ணப்பித்த, எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுள் மீளவும் பொது நேர்முகத் தேர்விலிருந்து மேற்குறிப்பிட்ட செய்முறை மேற்கொள்ளப்படும்.

(iv) ஏதேனுமொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கு எவரும் விண்ணப்பிக்காதவிடத்து அல்லது எழுத்துமூலப் பரீட்சையில் எவரும் சித்தியடையாதவிடத்து அல்லது வெற்றிடங்களை நிரப்புவதற்குப் போதிய அளவு எழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்ற வீணப்பதாரிகள் இல்லாதவிடத்து அவ்வாறான பிரதேச செயலாளர் பிரிவிற்கு வேறொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கு விண்ணப்பித்து எழுத்து மூலப் பரீட்சையிலும், செயன்முறைப் பரீட்சையிலும் சித்தியடையாதவர்களின் விருப்பைக் கேட்டறிந்து அவர்களின் புள்ளிகளின் திறமை ஒழுங்கு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

**7. *பரீட்சை மத்திய நிலையங்கள்* :**

இப்போட்டிப் பரீட்சை பின்வரும் இடங்களில் நடாத்தப்படும்.

| இடம் | இலக்கம் |
|---|---|
| குருநாகல் | 1 |
| புத்தளம் | 2 |

*8. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் 2003-02-13 ஆம் இலக்க வருமானத் தலைப்பில் வரவு வைக்கப்படுமாறு, தாம் நிரந்தரமாக வதியும் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் செலுத்தி, வ. மே. மா. ச. மு. 02 மாதிரிப் படிவத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை தமது விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டப்பட வேண்டும். இப்பற்றுச்சீட்டைத் தவிர்ந்து வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுகள், காசுக் கட்டளைகள் அல்லது பணம் பொறுப்பேற்கப்படமாட்டாது. எந்தவொரு காரணத்திற்காகவும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீள செலத்தப்படமாட்டாது என்பதையும், வேறு ஏதேனுமொரு பரீட்சைக் கட்டணத்திற்காக மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதையும் கருத்திற் கொள்ளவும்.*

*9. **விண்ணப்பிக்கும் முறை.-***

*9.1 விண்ணப்பப்படிவங்கள்.- ஏ4 (21×29 செ. மீ.) அளவுள்ள கடதாசியைப் பயன்படுத்தி.-*

(i) இலக்கம் 1 முதல் 3 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும்.

(ii) இலக்கம் 4 இலிருந்து உள்ள பந்திகள் ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்குமாறு தயாரிக்கப்பட வேண்டும்.

(iii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பப்படிவங்கள், பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள், அடிப்படைத் தகைமைகளை பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் என்பன எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட வீண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்துள்ளதா என்பது தொடர்பில் விண்ணப்பதாரிகள் அவதானமாக இருக்கவும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியினை வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையலாம்.

(iv) விண்ணப்பிக்கும் பாடங்கள் எந்தக் காரணத்திற்காகவும் மாற்றப்படாது என்பதுடன், ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தினை மாத்திரமே அனுப்பலாம்.

(v) **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்** :
விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ முப்படையில் அதிகாரம் பெற்ற அலுவலர்/ பொலிஸ் சேவையில் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியை வகிக்கும் அதிகாரி/ரூபா 240, 360 அடிப்படை வருடாந்த சம்பளம் பெறும், நிரந்தரப் பதவி வகிக்கும் அரச/மாகாண அரச சேவை அதிகாரி ஆகிய எவரேனும் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(vi) தற்பொழுது அரச அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவர் எனின் விண்ணப்பப்படிவம் நிறுவனத் தலைவரினூடாக முன்வைக்கப்பட வேண்டும்.

9.2 திருத்தமான பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2015.06.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

செயலாளர்,
வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு,
பீ நுழைவாயில்,
மாகாண சபைக் கட்டடத் தொகுதி,
குருநாகல்.

விண்ணப்பப்படிவத்தை தாங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘ஆசிரிய சேவைக்கு சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015’ என தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

9.3 உரியவாறு பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி, உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பத்தை முன்வைத்த, 2015.07.06 ஆந் திகதிக்கு இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூரணப்படுத்திய விண்ணப்பதாரிகளுக்கு போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி அட்டை வழங்கப்படும். எனினும் இப்போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிப்பதன் மூலம் தகைமைகளைப் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என கருதப்படலாகாது. விண்ணப்பதாரிகளின் தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்பட்டு தகைமைகளைப் பரீட்சிக்கும்போது தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்படவில்லை என அறியக் கிடைத்தால் அவ்விண்ணப்பதாரி நிராகரிக்கப்படுவர்.

விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது தொடர்பான அறிவித்தலொன்று வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இணையத் தளத்தில் (www.psc.nw.gov.lk) விடுக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் கிடைக்காதவர்கள் அது தொடர்பில் உடனடியாக “செயலாளர், வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை கட்டடத் தொகுதி, குருநாகல்” எனும் முகவரிக்கு பின்வரும் விபரங்களுடன் அறிவிக்க வேண்டும்:-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி ;
(iii) விண்ணப்பித்த முகவரி, பதிவிலக்கம், தபால் அலுவலகம் மற்றும் திகதி.

10. **ஆளடையாளம்**.- ஒவ்வொரு பரீட்சார்த்தியும், தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக,

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

11. **போலியான தகவல்களுக்கான தண்டனை**.-விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும்போது மிகவும் அவதானமாக திருத்தமான தகவல்களை வழங்கவேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப எவரேனும் ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் என அறியக் கிடைத்தால் பரீட்சை நடைபெறுவதற்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது, பரீட்சை முடிவடைந்த பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின்

விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்ட தகவல்கள் போலியானவை என அறியக் கிடைக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்பட முடியும். இப்போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிப்பதன் மூலம் தகைமைகளைப் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என கருதப்படமாட்டாது என்பதைக் கருத்திற் கொள்ளவும்.

12. இப்பரீட்சையை நடாத்துதல் அல்லது நடத்தாதுவிடல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல்/செய்யாதிருத்தல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பான இறுதி முடிவு வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவைச் சாரும். அதே போன்று இவ்வறிவித்தலில் ஒழுங்கு விதிகள் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பில் தெளிவுபடுத்தும்/தீர்மானிக்கும் உரிமை வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குரியது.

வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

காந்தி வேஹெல்ல,
செயலாளர்.
வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

வடமேல் மாகாண அரசாங்க சேவைகள்,
ஆணைக்குழு அலுவலகம்,
குருநாகல்,
2015, மே .

மாதிரி விண்ணப்பப் படிவம்

**வடமேல் மாகாண பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரிய சேவையின் 3 ஆம் வகுப்பின் 1 (அ) தர வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை இணைத்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015**
**(சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி மூலம்)**

பரீட்சைக்குத் தோற்றும் இடம் : ☐ இலக்கம் ☐
(அறிவித்தலின் 7 ஆம் பந்திக்கு ஏற்ப பூரணப்படுத்துக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் ☐ ☐
(சிங்களம் -2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4)
(உரிய இலக்கத்தை எழுதுக.) (அலுவலக உபயோகத்திற்கு)

| விருப்பு | விண்ணப்பிக்கும் பிரதேச செயலாளர் பிரிவின் தொடரிலக்கம் | பாடம் மற்றும் மொழி மூலத்தின் குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| 1<br>2<br>3 | | |

(அறிவித்தலின் 1 ஆம் பந்திக்கு ஏற்ப பூரணப்படுத்துக.)

1.0 1.1 முதலெழுத்துக்களை இறுதியில் சேர்த்து, முதலெழுத்துக்களுடன் பெயர் :-------.
(ஆங்கில பெரிய எழுத்தில்)

1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2.0 2.1 தற்போதைய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு தபாலிடப்படும்)

2.2 தற்போதைய முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 வதியும் பிரதேச செயலாளர் பிரிவு :----. கிராம அலுவலர் பிரிவு :----.

2.4 தொலைபேசி இலக்கம் :----. ☐☐☐☐☐☐☐☐☐☐

3.0 3.1 தேசிய அடையாள அட்டை இல. | | | | | | | | | | |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

3.2 பிறந்த திகதி :- ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

3.3 2015.07.06 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : | | | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

3.4 பால் ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

3.5 திருமாணமானவர்/திருமணமாகாதவர் : திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக.)

4.0 4.1 பெற்றுள்ள பட்டம் தொடர்பான விபரங்கள் :----.

4.1.1 பட்டம் :----.

4.1.2 பட்டம் வழங்கிய பல்கலைக்கழகம் :----.

4.1.3 பட்டப்படிப்பிற்காக தெரிவு செய்த பிரதான பாடம்/பாடங்கள் :----.

4.1.4 பட்டம் பெற்ற திகதி :----.

4.1.5 பட்டப் படிப்பை மேற்கொண்ட மொழி மூலம் :----.

4.2 க. பொ. த. (சா. த.)

| | சித்தியடைந்த வருடம் | பரீட்சை சுட்டெண் |
|---|---|---|
| முதல் அமர்வு | | |
| இரண்டாவது அமர்வு | | |

| | பாடம் | முதல் அமர்வு பெறுபேறு | இரண்டாவது அமர்வு பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |
| 6 | | | |
| 7 | | | |
| 8 | | | |
| 9 | | | |
| 10 | | | |

5. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

5.1 பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பிரதேச செயலகம் :----.

5.2 பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :----.

5.3 செலுத்திய தொகை :----.

பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்துக்கொள்க.
பற்றுச்சீட்டை இங்கு கழராதவாறு ஒட்டவும்.

*6.* ***விண்ணப்பதாரியின் உறுதியுரை.-***

*(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கெட்டிய வகையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன். இங்கு ஏதேனும் ஒரு பகுதியை பூரணப்படுத்தாமையினால் அல்லது/பிழையாக பூரணப்படுத்துவதன் மூலம் ஏற்படக் கூடிய நட்டத்தை பொறுப்பேற்கிறேன். மேலும் இங்கு அனைத்துப் பகுதிகளும் திருத்தமாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.*

*(ஆ) என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய்யானது என நிரூபிக்கப்படுமாயின், நியமனத்திற்கு முன் தகுதியற்றவராக கருதப்படுவேன் என்பதை அறிவேன். நான் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் பிழையானது என்று தெரியவந்தால் நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.*

*(இ) பரீட்சைக் கட்டணத்திற்கான தொகையை பிரதேச செயலகத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு இணைத்துள்ளதை உறுதிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால்/வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு இணங்குகிறேன்.*

*(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.*

----,
*விண்ணப்பதாரியின் கையொப்பம்.*

*திகதி :----.*

*7.0* ***விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல் :***

*இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ...................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர் எனது முன்னிலையில் ........... ஆந் திகதி அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.*

----,
*உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்*

*உறுதிப்படுத்தும் அதிகாரியின் முழுப்பெயர் :----.*
*பதவி :----.*
*முகவரி :----.*
*திகதி :----.*
*(பதவி முத்திரையின் மூலம் உறுதிப்படுத்துக.)*

*8.0* ***விண்ணப்பதாரி அரச அல்லது மாகாண அரச சேவையில் கடமையிலிருப்பவர் எனின் திணைக்களத் தலைவரின் உறுதியுரை :***

*திரு./ திருமதி/ செல்வி ...................................................... அவர்களின் விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கிறேன். அவர் இவ்வமைச்சின்/திணைக்களத்தின் நிரந்தர/தற்காலிக/அமைய ஊழியராக கடமையாற்றுவதாகவும், இப்பதவிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது என்பதை அறியத்தருகின்றேன்.*

----,
*திணைக்களத் தலைவர் அல்லது*
*அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி.*

*பதவி :----.*
*திகதி :----.*
*அமைச்சு/திணைக்களம் :----.*
*(பதவி முத்திரையின் மூலம் உறுதிப்படுத்துக.)*

*6-196*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2015***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 05.06.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.05.2015 |
| | | வெள்ளி | 12.06.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.05.2015 |
| | | வெள்ளி | 19.06.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.06.2015 |
| | | வெள்ளி | 26.06.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.06.2015 |
| **யூலை** | .. | வெள்ளி | 03.07.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.06.2015 |
| | | வெள்ளி | 10.07.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.06.2015 |
| | | வெள்ளி | 17.07.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.07.2015 |
| | | வெள்ளி | 24.07.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.07.2015 |
| | | வியாழன் | 30.07.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.07.2015 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 07.08.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.07.2015 |
| | | வெள்ளி | 14.08.2015 | .. | நண்பகல் 12 | வியாழன் | 30.07.2015 |
| | | வெள்ளி | 21.08.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.08.2015 |
| | | வெள்ளி | 28.08.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.08.2015 |

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*